ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2002/32 - 2017 ජනවාරි මස 18 වැනි බදාදා - 2017.01.18

*2002/32 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (xv)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, (2016, ஓகத்து 09 ஆந் திகதிய 1979/20 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாக கருதப்படுகின்ற கட்டளையான இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்ற 2006, யூன் 09 ஆந் திகதிய 1448/27 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள பதிவுகளிற்கு நேரொத்ததான I ஆம் நிரலில் காணப்படுகின்ற "விஞ்ஞான பீடம்" என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் விடயங்கள் மற்றும் பதிவுகளினைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-*

| *"நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தொழில்நுட்பவியல் பீடம்* | *1. கருவிமயமாக்கல் மற்றும் தன்னியக்கமாக்கல் தொழில் நுட்பவியல் துறை* |
| | *2. சூழல்சார் தொழில்நுட்பவியல் துறை* |
| | *3. கமத்தொழில்சார் தொழில்நுட்பவியல் துறை* |
| | *4. தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழில் நுட்பவியல் துறை* |
| *தாதியியல் பீடம்* | *1. தாதியியலுக்கான அடிப்படை விஞ்ஞானங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறை* |
| | *2. அடிப்படைத் தாதியியல் துறை* |
| | *3. பிணியிய தாதியியல் துறை".* |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2016, திசெம்பர் 31.*

*02- 99*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*